Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, APRIL 06, 2023

வியாழக்கிழமை ஏப்ரல் 06, 2023 | ஒளி: 08 கதிர்: 245 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## புத்தாண்டு காலத்தில் மக்களே உஷார்



அடுத்த வாரத்தில் தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாடப்படவுள்ள நிலையில், பொது மக்கள் புத்தாண்டுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள தயாராகி வருகின்றனர்.

தொடர்ச்சி P2




இலங்கையின் பொருளாதாரம்

## 2023க்கு பின்னரும் சவால்களை சந்திக்கும்

### உலக வங்கி அறிக்கையில் தெரிவிப்பு

2023ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் இலங்கையின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளும் என்று இலங்கை தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் உயர்ந்துள்ள நிதித் துறையின் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நிலையற்ற அரசியல் நிலைமை என்பன, நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்துக்கு குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதாகவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்துக்கான மூல காரணங்களைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ள உலக வங்கி, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க வெளி மற்றும் சில உள்நாட்டு கடன்களை மறுசீரமைக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2



## 10 இலட்சம் முட்டைகள் கொழும்புக்கு வந்தன

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 10 இலட்சம் முட்டைகளை ஏற்றிய கப்பல், கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தாகவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திடம் குறித்த முட்டைத் தொகுதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை (04) இரவு நாட்டை வந்தடைந்த குறித்த முட்டைத் தொகுதியின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், முட்டைகள் அனைத்தும் பேக்கரி உற்பத்தி மற்றும் ஹோட்டல்களுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

நீதித்துறை உத்தரவுகளை விளக்குவதற்கு

# உயர்நீதிமன்றத்தை அழைக்க கூடாது

### பாராளுமன்ற அதிகாரங்கள், சிறப்புரிமைகள் உத்தரவால் மீறப்படவில்லை

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

ஸ்ரீ லங்கா நீதிஞ சங்கமய
BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

நீதித்துறை உத்தரவுகளை எந்த நபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ விளக்குமாறு ஒரு சுதந்திரமான அமைப்பாக இருக்கும் உயர்நீதிமன்றத்தை அழைக்கக் கூடாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது.

சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன, செயலாளர் இசுரு பாலபட்டபெந்தி ஆகியோரின் கையொப்பத்துடன், புதன்கிழமை (05) வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இந்திய – இலங்கை கடற்படையினரால்

## இன்று முதல் கொழும்புக்கு வெளியே கடல்சார் பயிற்சி



இந்திய - இலங்கை கடற்படையினர் இடையிலான பத்தாவது வருடாந்த கடல்சார் இருதரப்பு பயிற்சியான சிலிநெக்ஸ் பயிற்சியின் இரண்டாம் கட்ட கடல்சார் பயிற்சிகள், இன்று (06) முதல் 08ஆம் திகதி வரையில் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் நடைபெறுகின்றன.

இருநாட்டினதும் கடற்படையினரின் இயங்குதிறன் மேம்பாடு, பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துதல், கடல் மார்க்கமான பன்முக செயற்பாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் சிறந்த செயல்முறைகளை பரிமாறுதல் ஆகியவற்றினை இலக்காகக் கொண்டு சிலிநெக்ஸ் 2023 பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

தொடர்ச்சி P2

இலங்கையின் பொருளாதாரம்

## 2024இல் சாதகமாக நகரத் தொடங்கும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி கணிப்பு

2024 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் சாதகமான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி படிப்படியாக நகரத் தொடங்கும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த முதன்மை பொருளாதார வெளியீடான 'ஆசிய அபிவிருத்தி கண்ணோட்டம் 2023'இல் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்



அடுத்த சில நாள்களில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதிப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவரின் நடைமுறைச் சாத்தியமற்ற தீர்மானத்தாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் பிராந்திய முகாமையாளர்கள், எரிபொருள் முற்பதிவுகளை காசோலைகளாக வழங்குவதாக தெரிவித்துள்ளனர்.

எனினும், நிதிப்பிரிவின் குறித்த அதிகாரி எரிபொருள் முற்பதிவுகளை பணம் மூலம் மாத்திரம் செய்ய முடியும் என அறிவித்ததை அடுத்து, பல எரிபொருள் நிரப்பு நிலையங்களால் முற்பதிவுகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

சுகாதார அமைச்சர் பதவியை

## வழங்கினால் ஏற்கத் தயார்



எதிர்காலத்தில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்பட்டு, தமக்கு சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளவதற்கு தான் தயார் என்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வெடுக்குநாறி விவகாரம்

## அமைச்சரவையில் டக்ளஸ் அதிருப்தி



### விரைவில் தீர்மானம் என்கிறார் ஜனாதிபதி

வெடுக்குநாறி விவகாரத்தில் சிலைகள் உடைக்கப்பட்டபோது ஏற்பட்ட உணர்வுகளைவிட, கடந்த சில தினங்களில் வெளிப்படுத்தப்பட்ட சில தரப்புகளின் வியாக்கியானங்கள் எமக்கு ஏற்படுத்திய உணர்வுகள் ஆழமானவை என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் அதிருப்தி வெளியிட்டார்.

குறுக்கிட்ட ஜனாதிபதி, எதிர்வரும் வாரங்களில் சம்பந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடி சரியான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## மின்கட்டண குறைப்பை முன்மொழியுங்கள்

### இ.மி.சவுக்கு ஜனக கோரிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள சமீபத்திய அபிவிருத்திகளை கருத்தில் கொண்டு, கட்டண குறைப்பை முன்மொழியுமாறு இலங்கை மின்சார சபையிடம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் மின்சார கட்டணத்தை 30% குறைக்க முடியும் என்று குறிப்பிட்ட அவர், 2022 உடன் ஒப்பிடும்போது, 2023 முதல் காலாண்டுக்கான உண்மையான தரவுகள் மூலம் நாட்டில் மின்சாரத் தேவை 18% குறைவாக உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2



ஆபாச நடிகைக்கு பணம் கொடுத்த வழக்கு:


## ட்ரம்ப் கைதாகி 57 நிமிடத்தில் விடுதலை

ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ்க்கு பெருந்தொகை பணம் கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சோற்றுப் பொதி, கொத்து விலை 20% ஆல் குறைகிறது

### ரூ.10ஆல் தேநீர் விலை சரிந்தது



சோற்றுப் பொதி, கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகள், புதன்கிழமை (05) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில், 20 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் எரிவாயு, எரிபொருள் மற்றும் கோதுமை மாவின் விலைகள் குறைக்கப்பட்டதை அடுத்தே மேற்குறிப்பிட்ட விலைகள் திருத்தப்பட்டு உள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 2023க்கு பின்னரும் சவால்களை சந்திக்கும்

2022ஆம் ஆண்டில் 7.8 சதவீதம் சுருங்குவதைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 4.3 சதவிகிதம் சுருங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவை தொடர்ந்து குறைந்து வருவதால், வேலை மற்றும் வருமான இழப்புகள் தீவிரமடைகின்றன என்றும் விநியோகத் தடைகள் உற்பத்தியை மோசமாக பாதிக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு வலுவான மற்றும் நம்பகமான கட்டமைப்பு சீர்திருத்தத் திட்டம் நீண்டகால நெருக்கடியைத் தவிர்க்கவும் தற்போதைய பொருளாதார சிக்கல்களின் மூல காரணங்களை நிவர்த்தி செய்யவும் முக்கியமானது என்று தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடியை வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக இலங்கை பயன்படுத்திக்கொள்ள முடியும் என உலக வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# உயர்நீதிமன்றத்தை அழைக்கக் கூடாது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்ற உத்தரவின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்படவில்லை என்றும் சங்கம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தை மதித்து அவதானிப்பது அனைத்து அரசாங்க மற்றும் ஏனைய நிறுவனங்களின் கடமை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதித்துறை செயற்பாட்டில் தலையிடுவது ஆபத்தான முன்னுதாரணமாக அமையும் என்றும் அது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய என்றும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 3 ஆம் திகதியன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றம், 2023 வரவு செலவு திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபருக்கு பிறப்பித்தது.

குறித்த இடைக்கால உத்தரவின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த மார்ச் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

# புத்தாண்டு காலத்தில் மக்களே உஷார்

இந்நிலையில், மோசடி நடவடிக்கைகளில் மக்கள் சிக்கிக் கொள்வதைத் தடுப்பதற்கும் பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் பொலிஸாரினால் கீழ்வரும் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

பொருட்களை கொள்வனவு செய்கையில் அவை நுகர்வுக்கு பொருத்தமானவையா என்றும் அவற்றின் விலைகள் குறித்து மக்கள் அவதானமாக இருக்குமாறும், அதிக விலைகளில் சிக்க வேண்டாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் மூலம் போலி ரூபாய் தாள்கள் புழக்கத்தில் விடப்படுவதால் அவதானமாக இருக்குமாறு மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பிக்பொக்கெட்காரர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும், அவ்வாறான பகுதிகளில் தங்களது சொந்த உடமைகளை பாதுகாப்பாக வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொருட் கொள்வனவுகளுக்கான குழந்தையை அழைத்துச் சென்றால் தங்க நகைகளால் குழந்தைகளுக்கு அலங்காரம் செய்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடும் சிரேஷ்ட பிரஜைகள் சுகாதார காரணங்களுக்காக முகக்கவசங்களை அணியுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொள்வனவு நடவடிக்கைகளுக்கு தங்கள் தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துபவர்கள், நியமிக்கப்பட்ட வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்கள் சரியாகப் பூட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மக்கள் தங்களுடைய தலைக்கவசம் அல்லது உடமைகளை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களில் விட்டுச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொருட் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக வீட்டை விட்டு வெகுதூரம் செல்லும் பொதுமக்கள் இதுபோன்ற தகவல்களை சமூக வலைதளங்களில் பகிரவோ,விளம்பரப்படுத்தவோ வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுற்றுப்பயணங்களில் ஈடுபடும் மக்கள் காலநிலையை அவதானிக்குமாறும், பாதுகாப்பற்ற நீர்வீழ்ச்சிகளில் குளிப்பது போன்ற அபாயகரமான செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் அந்த அறிவுறுத்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 10 இலட்சம் முட்டைகள் கொழும்புக்கு வந்தன

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகள், கடந்த மார்ச் 23 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த நிலையில், கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் 10 இலட்சம் முட்டைகளும் வந்தடைந்தன.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 40 இலட்சமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று முதல் கொழும்புக்கு வெளியே கடல்சார் பயிற்சி

ஏப்ரல் 03 ஆம் திகதி ஆரம்பமான சிலினெக்ஸ் பயிற்சியின் துறைமுக மட்டத்திலான பயிற்சிகள் 05ஆம் திகதி வரை கொழும்பிலும் 06ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரையில் கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் கடல்சார் பயிற்சிகளும் நடைபெறுவதாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இந்தியக் கடற்படையானது ஐஎன்எஸ் கில்தான் ( அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு கடற்படைக் கப்பல்) மற்றும்ஐஎன்எஸ் சாவித்ரி ரோந்துக் கப்பல்) ஆகிய கடற்படை கப்பல்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.

அதேநேரம் இலங்கை கடற்படையானது எஸ்எல்என்எஸ் கஜபாகு ( அதிநவீன ரோந்துக் கப்பல்) மற்றும் எஸ்எல்என்எஸ் சாகரா (OPV) ஆகியவற்றால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இந்திய கடற்படையின் சேத்தக் ஹெலிகொப்டர் மற்றும் கடல் ரோந்து பணிகளுக்கான டோனியர் விமானமும் இலங்கை கடற்படையின் டோனியர் விமானம் மற்றும் பெல் 412 ரக ஹெலிகொப்டர் ஆகியவையும் இப்ப பயிற்சியில் கலந்துகொள்கின்றன.

இரு கடற்படையினரதும் விசேட படைகளும் இப்பயிற்சியில் பங்கேற்கின்றன. இதற்கு முன்னதான சிலினெக்ஸ் பயிற்சி 2022 ஆம் ஆண்டு மார்ச் 07ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் விசாகபட்டினத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

துறைமுக மட்டத்தில் நடைபெறும் பயிற்சிகளில் விளையாட்டுகள், யோகா பயிற்சிகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் இதன் மூலமாக தோழமை மற்றும் நட்புறவின் பிணைப்பினை கட்டி எழுப்புவதற்கும் பரஸ்பரம் துறைசார்ந்த விடயங்களை கற்றுக்கொள்வதற்கும், அதேபோல பொதுவான பெறுமானங்களை பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன.

கடல் மார்க்கமாக மிகவும் வலுவான பரஸ்பர ஒத்துழைப்பினை கொண்டிருக்கும் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான ஆழமான ஈடுபாட்டினை பயிற்சிகள் மேலும் விஸ்தரிப்பதாக அமைகின்றன.

மேலும் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் கௌரவ பிரதமர் அவர்களது பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய இலங்கை கடற்படை இடையிலான தொடர்புகள் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வழங்கினால் ஏற்கத் தயார்

பண்டாரகம தனியார் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் முதன்முறையாக அமைச்சரானார் என்றும் சிலர் பணத்துக்காகவும் சிலர் அரசியலுக்காகவும் கட்சி மாறுவதாக சுட்டிக்காட்டினார்.

தாம் எப்பொழுதும் அரசியல் சார்ந்துதான் முடிவுகளை எடுப்பதாகக் குறிப்பிட்ட அவர் அதனால்தான் மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றார்.

# 2024இல் சாதகமாக நகரத் தொடங்கும்

கடன் மறுசீரமைப்பு மற்றும் கொடுப்பனவுகளின் சமநிலை சிக்கல்களுடன் தொடர்ந்து போராடுவதால் 2022 இல் 7.8% ஆக சுருங்கிய பொருளாதாரம் 2023 இல் 3% ஆக சுருங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் மற்றும் தேவையான சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் இலங்கை நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை அனுமானித்து அபிவிருத்தி வங்கி கணிப்பை தெரிவித்துள்ளது.

2016 மற்றும் 2017 இல் ஏற்பட்ட அனர்த்தங்கள், 2018 இல் அரசியலமைப்பு நெருக்கடி, 2019 இல் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல், 2020-2021 இல் கொவிட் தொற்றுநோய், 2022 இல் ரஷ்ய-உக்ரைன் நெருக்கடி மற்றும் 2019 இல் வரி குறைப்புகளை இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களாக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வது கடன் நிவாரணம் மற்றும் சீர்திருத்தங்களின் உறுதியான அமலாக்கம் ஆகியவற்றில் சரியான நேரத்தில் முன்னேற்றத்தை சார்ந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவையான சீர்திருத்தங்களில் உள்நாட்டு வளங்களை திரட்டுதல், அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் நிதிச்சுமையை குறைக்கும் வகையில் செயல்திறனை மேம்படுத்துதல், பொது நிதி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைகளை ஒத்திசைப்பதன் மூலம் தனியார் துறை செயல்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவை அடங்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு ஊழலுக்கு எதிரான சட்டத்தை வலுப்படுத்துதல், பலமான நிறுவனங்களை கட்டியெழுப்புதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பது போன்ற நிர்வாக மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை மேம்படுத்துவதும் இன்றியமையாததாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

பூரணை தினமான நேற்று புதன்கிழமை (05) வங்கிகள் மூடப்பட்டுள்ளதால் பணம் கிடைப்பதில் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக குறித்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

செவ்வாய் (04) நள்ளிரவு முதல் வாகனங்களுக்கான எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் தொடர்ந்தும் எரிபொருள் நிலையங்களுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# மின்கட்டண குறைப்பை முன்மொழியுங்கள்

ரூபாய்கு நிகரான அமெரிக்க டொலரின் நாணய மாற்று விகிதம் இருந்து குறைந்துள்ளதாகவும் 370 முதல் சுமார் 325 ரூபாய் என்பது 13% குறைப்பு என்று குறிப்பிட்ட அவர், அதன் மூலம் மின்சார சபையின் எரிபொருள் மற்றும் ஏனைய இறக்குமதி செலவுகளை ஆண்டுக்கு 20% குறைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மேற்கூறிய இரண்டு செலவுகளைத் தவிர, சர்வதேச எரிபொருள் விலைகள் கணிசமான அளவு குறைந்துள்ளதாகவும், இதன் விளைவாக, மின்சார சபைக்கான எரிபொருள் செலவுகள் கணிசமான அளவு குறையும் எனவும் ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

# ட்ரம்ப் கைதாகி 57 நிமிடத்தில் விடுதலை

2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது, ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் (Stormy Daniels) பரபரப்பு தகவல் ஒன்றை வெளியிட்டார்.

தனக்கும் ட்ரம்பிற்கும் இடையிலான இரகசிய உறவு தொடர்பில் ஸ்டார்மி டேனியல்ஸ் வெளிப்படுத்தினார். எனினும், அதை ட்ரம்ப் திட்டவட்டமாக மறுத்தார்.

எவ்வாறாயினும், இந்த வெளிப்படுத்தல் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப்க்கு பின்னடைவு ஏற்பட்டது.

இதனையடுத்து, இவ்விவகாரத்தைப் பற்றி ஸ்டார்மி வாய்த்திறக்காமல் இருப்பதற்காக, , ட்ரம்ப் தனது சட்டத்தரணி மைக்கேல் கோஹன் (Michael D Cohen) மூலம் பணம் கொடுத்துள்ளார். அந்த பெருந்தொகை பணம் தேர்தலில் பிரசார நிதியில் இருந்து கொடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.

எனினும், அந்த தொகை ட்ரம்பின் தேர்தல் வரவு-செலவு கணக்கில் சட்ட ரீதியிலான செலவு என்று குறிப்பிடப்பட்டது.

அமெரிக்காவில் பொய்யாக வணிக செலவைக் காட்டுவது சட்ட விரோதம் என்பதால், ட்ரம்ப் மீது சமீபத்தில் தேர்தல் பிரசார வணிக சட்டத்தின் கீழ் கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, நியூயோர்க் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (04) வழக்கு விசாரணை ஆரம்பமானது.

அவர் உயர் பதவியை வகித்ததை கருத்தில் கொண்டு, கை விலங்கு பூட்டப்படவில்லை.

அவரது கைரேகைகள் பதிவு செய்யப்பட்டன.

நீதிபதியின் கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தைகளிலேயே ட்ரம்ப் பதில் அளித்தார். அவர் மீதான 34 குற்றச்சாட்டுகளை நீதிபதி வாசித்த போது, அதை திட்டவட்டமாக மறுத்தார். தான் குற்றம் எதுவும் செய்யவில்லை என்று பதில் அளித்தார். சுமார் 57 நிமிடங்கள் நீதிமன்றில் இருந்த ட்ரம்ப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# சோற்றுப் பொதி, கொத்து விலை 20% ஆல் குறைகிறது

சாதாரண தேநீர் கோப்பையின் விலை ரூபாவால் குறைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். 10க்கு விற்க வேண்டும். 30 மற்றும் ஒரு கப் பால் ரூ. 90.

ஒரு கோப்பை சாதாரண தேநீர் மற்றும் பால் தேநீரின் விலையும் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தேநீர் 30 ரூபாய்க்கும் பால் தேநீர் 90 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

விலை திருத்தம் வர்த்தகர்களை பாதிக்கிறது என்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பால் நுகர்வோர்களும் பயனடைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உணவு மற்றும் பேக்கரி பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், இல்லாவிட்டால் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்களில் நீண்ட காலத்துக்கு வியாபாரம் இல்லாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# அமைச்சரவையில் டக்ளஸ் அதிருப்தி

வெடுக்குநாறி விவகாரம் தொடர்பாக திங்கட்கிழமை (03) இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

குறித்த அமைச்சரவை கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ், "வெடுக்குநாறி மலையை 2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தியிருந்தது. (ஆனாலும் இதுவரை அதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை)

தொடர்ச்சியாக, 2019 ஆண்டிலிருந்து வெடுக்குநாறி மலையில் அமைந்திருக்கும் புராதன ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு தொல்லியல் திணைக்களத்தினால் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே 2020 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. குறித்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் பொது மக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான தடை உத்தரவுகளையும் பிறப்பிக்காத நிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இதுதொடர்பாக சட்டமா அதிபர் தரப்புக்களுடன் கலந்துரையாடிய போது, குறித்த வழக்கு கோவை இன்னும் தமக்கு கிடைக்கவில்லை எனவும், கிடைத்தவுடன் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக, வெடுக்குநாறி விவகாரத்தில் நீதிமன்றம் எந்தவிதமான தடை உத்தரவுகளையும் வழங்காத போதிலும், வழக்கு நிலுவையில் இருப்பதை காரணம் காட்டி, உடைக்கப்பட்ட சிலைகளை மீளப் பிரதிஸ்டை செய்வதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

அதேவேளை, குருந்தூர் மலையில் விகாரை அமைப்பதற்கு இடைக்கால தடையை நீதிமன்றம் விதித்திருக்கின்ற நிலையிலும் விகாரை கட்டி முடிக்கப்பட்டிருப்பதை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் தமிழ் மக்களை மாத்திரமல்ல, நியாயமாகவும் நடுநிலையாகவும் சிந்திக்கும் அனைவருக்கும் வேதனையை ஏற்படுத்தும்.

இன்றைய அமைச்சரவையில்கூட உண்மை மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை பத்திரம் விவாதத்துக்கு வந்திருக்கிறது. இவையெல்லாம் அர்த்தபூர்வமானவையா என்ற எண்ணத்தினை நடக்கின்ற சம்பவங்கள் தோற்றுவிக்கின்றன" என்று தெரிவித்தார்






திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சிம்ம வாகனத்தில் வலம்வர, திருகோணமலை சமுத்திரக்கரையில் பக்தர்கள் புடைசூழ தீர்த்தோற்சவம் புதன்கிழமை (05) காலை இடம்பெற்றது, தீர்த்தம் ஆடி நேர்த்திக்கடன் நிறைவேற்றப்பட்டது.

( அ. அச்சுதன்)

## பங்குனி உத்தர திருவிழா...





காரைதீவு சிவசக்தி குரு குடைச்சாமி சர்வமத பீடத்தில் பங்குனி உத்தர திருவிழா புதன்கிழமை (05) பக்திபூர்வமாக இடம்பெற்றது. அடியார்கள் கடலில் இருந்து தண்ணீர் எடுத்துவந்து சிவலிங்க பெருமானுக்கு நீராபிஷேகம் மேற்கொண்டனர். இவர்களை, ஜீவாகரன் சுவாமி ஆசிர்வதித்தார். மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.

க.விஜயரெத்தினம்

## தேர்த் பவனி...



கண்டி அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் பஞ்சரதபவனி செவ்வாய்க்கிழமை (04) இரவு வெகு சிறப்பாக இடம்பெற்றது.

## களைகட்டிய தீர்த்தோற்சவம்...





"ஈழத்து பழனி" என அழைக்கப்படும் சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் புதன்கிழமை (05) வெகு சிறப்பாக நடைபெற்றது.
( வி.ரி.சகாதேவராஜா)



## தேர்த் திருவிழா...





வாழைச்சேனை, பேத்தாளை அருள்மிகு ஸ்ரீபாலாம்பிகா சமேத பாலீஸ்வரர் சுவாமி தேவஸ்தான வருடாந்த தேர்த்திருவிழா செவ்வாய்க்கிழமை (04) இடம் பெற்றது.

எம்.எம் அஹமட் அனாம்

### பாரபட்சமான இரத்த தான

# வழிகாட்டுதல்களை சீர்திருத்தம் செய்தல்



மதுரி தமிழ்மாறன்

(தேசிய சட்ட ஆலோசகர்- இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு)

உயிர் வாழ்வதற்கு இரத்தம் இன்றியமையாதது என்றும், இரத்த தானம் செய்வதால் உயிர்கள் காப்பாற்றப்படும் என்று கூறுவதும் சாதாரணமானது. உலக சுகாதார நிறுவனம் இரத்த தானம் என்பதனை மற்றுமொரு நபருக்குக் கொடுக்கும் விலைமதிப்பற்ற பரிசு என்று கூறுகிறது. அவ்வாறிருக்கும் போது ஏன் இத்தகைய தாராள பண்பினை பாகுபாட்டிற்கும், களங்கத்திற்கும் உள்ளாக்க வேண்டும்?

இலங்கையில், தேசிய இரத்த மாற்ற சேவையினால் (NBTS) வெளியிடப்பட்டுள்ள இரத்த தான வழிகாட்டுதல்களில், இரத்த தானம் செய்பவர் 'அச்சுறுத்தலான நடத்தைகளுக்கு உள்ளாகாதவராக இருக்க வேண்டும்' எனக் குறிப்பிடுகிறது. அந்த வழிகாட்டுதல்கள் பின்வரும் நடத்தைகளை "அச்சுறுத்தலான நடத்தைகள்" என அடையாளம் காட்டுகின்றது:

ஒன்றுக்கு மேற்பட்ட பாலியல் துணைகளை கொண்டிருத்தல்

ஆண்கள் பிற ஆண்களுடன் புணர்வு கொள்ளுதல் (MSMs);

ஒரு முறையாவது பாலியல் தொழிலில் ஈடுபட்டிருத்தல்;

கடந்த ஆண்டில் "ஆபத்தான பாலியல் நடத்தையில்" ஈடுபட்டிருத்தல்; மற்றும்

குறைந்தது ஒரு முறையாவது ஊசி மூலம் போதை மாத்திரைகளை உட்செலுத்தியிருத்தல்

இதன் விளைவாக, மக்கள் இவர்களை "அச்சுறுத்தலான நடத்தைகளுக்கு" உள்ளானவர்கள் என வகைப்படுத்துவதன் மூலம், இந்த வழிகாட்டுதல்கள் தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபால் ஈர்ப்புள்ளோர் மற்றும் பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராகவும் களங்கம் மற்றும் பாகுபாட்டினை நிலைநிறுத்துகின்றன.

வரலாற்று ரீதியாக தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றினை கடத்துபவர்களாக முத்திரை குத்தப்பட்டிருந்தாலும், சமீபத்திய ஆண்டுகளில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சிகள், புதிய தொழில்நுட்பத்தின் தோற்றங்கள் என்பன எச்.ஐ.வி வைரஸைப் பற்றிய புரிதலையும் கொண்டு வந்துள்ளன.

எச்.ஐ.வி பற்றிய அறிவியல் மற்றும் மருத்துவ சான்றுகள் மற்றும் பரவும் வழிமுறைகள், தடுப்பு முறைகள் மற்றும் சிகிச்சைகள் போன்றவை இரத்த தானம் பற்றிய தேசிய வழிகாட்டுதல்களை சீர்திருத்துவதை சாத்தியமாக்குவதுடன், இதனால் அவை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரங்களுக்கு இணங்குகின்றன.

மேலும், தேசிய எச்.ஐ.வி புள்ளிவிபர தரவுகளுக்கு அமைவாக 2020 இல் பதிவான 363 புதிய தரவுகளில், 48% ஆண்களுடன் புணர்வு கொள்ளும் ஆண்கள் என்றாலும், சுமார் 41% பேர் எதிர்பாலீர்ப்பில் உள்ளவர்கள் ஆவர்.

"ஆபத்தான நடத்தைகள்" என வழிகாட்டுதல்கள் அடையாளம் காணும் நடத்தையானது, யாருக்கும் பொருந்தும் போது - அவர்களின் உண்மையான அல்லது உணரப்பட்ட பாலீர்ப்பு , பாலினம், பாலின அடையாளம் அல்லது பாலின வெளிப்பாடு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் - அவ்வழிகாட்டுதல்கள் உண்மையில் தன்பாலீர்ப்புள்ள மற்றும் இருபால் ஈர்ப்புள்ளோர் மற்றும் பாலியல் தொழிலாளர்கள் என வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவோரை மேலும் பாகுபாடு மற்றும் சமூகக் களங்கத்துக்கு ஆளாக்கின்றன.

தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் இருபால் ஈர்ப்புள்ளோர் ஏற்கனவே குற்றவியல் ரீதியான உட்பட வெவ்வேறு விதமான பாகுபாடு, சமூகக் களங்கம் மற்றும் ஓரங்கட்டப்படுதல் ஆகியனவற்றை அனுபவிக்கின்றனர்.

1833 ஆம் ஆண்டின் இலங்கை தண்டனைச்சட்டக்கோவை பிரிவு 365 மற்றும் பிரிவு 365 A ஆகியன முறையே 'இயற்கை நியதிக்கு முரணான தவறுகள்'மற்றும் 'ஆட்களுக்கு இடையில் மிக்க இழிவான செயல்கள்'என்பதனை குற்றமாக்கின்றது.

தண்டனைச்சட்டக்கோவை இந்த சொற்றொடர்களுக்கு தெளிவான பொருளை வழங்காவிட்டாலும் , இரு பிரிவுகளும் சம்மதத்துடனான ஒரேபால் பாலியல் உறவுகளை, தன்பாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் இருபால் ஈர்ப்புள்ள ஆண்கள் போன்றவர்களை குற்றவாளியாக்குகின்றது. இந்த "குற்றங்களை" புரிந்தவர்கள் பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அனுபவிக்கலாம்.

அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகளிலும் இலங்கை ஓர் அங்கத்துவ நாடாகும். எனவே, மனித உரிமைகள், அதாவது பாகுபாட்டிலிருந்து சுதந்திரம் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாகுபாடு இல்லாமல் சட்டத்தின் சம பாதுகாப்புக்கு உரித்துடைமை ஆகியவை சர்வேதச ஒப்பந்தங்களின் கீழ் இலங்கையை பிணைத்துள்ளது.

இந்த சமவாயங்கள் ஆண்களுடன் புணர்வில் ஈடுபடும் ஆண்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் இருபாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் பாலியல் தொழிலாளர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களுக்கும் சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமையை உத்தரவாதம் செய்கின்றன.

அரசின் மேலதிக கடமைகளில் ஒன்றாக உயர்தரமான சுகாதார தரத்தை பேணுவதற்கான உரிமையினை நிறைவேற்றுகையில் (யோக்கியகர்த்தா கொள்கைகளின் 17ஆம் கொள்கை), YP + 10 இற்கு அமைவாக "இரத்தம், பாலணுக்கள், கருக்கள், உறுப்புகள், செல்கள் அல்லது பிற திசுக்களின் தானம் தொடர்பான சட்ட விதிகள், ஒழுங்குமுறைகள் அல்லது வேறு ஏதேனும் நிர்வாக நடவடிக்கைகளின் அளவீடுகள் பாலீர்ப்பு, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு அல்லது பாலின பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக் கூடாது என்பதை உறுதி செய்தல்" என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் 12 ஆம் உறுப்புரை சட்டத்தின் முன் சமத்துவத்திற்கான உரிமை மற்றும் அனைத்து நபர்களுக்கும் சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பை உறுதி செய்கிறது. இது இனம், மதம், மொழி, சாதி, பாலினம், அரசியல் கருத்து மற்றும் பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாட்டைத் தடைசெய்கிறது, இருப்பினும் பாலீர்ப்பு , பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாட்டை தெளிவாக தடை செய்யவில்லை.

எனினும் இலங்கை அரசாங்கம் பல்வேறு ஐ.நா. அமைப்புகளுக்கு முன் அரசியலமைப்பின் 12ஆம் உறுப்புரை பாலீர்ப்பு , மற்றும் பாலின அடையாளம், ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதில் இருந்து சுதந்திரமாக இருப்பதற்கான உரிமையை உறுதி செய்கிறது என்று வலியுறுத்தியுள்ளது.

ஆனால் மேலே குறிப்பிட்டுள்ள இலங்கையின் தண்டனை சட்டக் கோவை பிரிவு 365 மற்றும் பிரிவு 365A போன்றவை மற்றும் சட்டத்தின் பிரயோகப் பயன்பாடு இந்த வாதத்தை முற்றிலும் மறுப்பது போல் தெரிகிறது.

MSMகள் இரத்த தானம் வழங்குவதற்கு அவசியமான இரத்த தானம் செய்வதற்கான கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளதுடன் வழங்குனர்களின் தகுதிகளை அளவிடும் காலங்கடந்த விதிமுறைகள் ஆகிவற்றை கடந்து உலகெங்கிலும் உள்ள நாடுகள் நகர்ந்துக் கொண்டிருக்கின்றன. பாலியல் தொழிலாளர்கள் விடயத்திலும் இதே தன்மை தான் நிலைத்துள்ளது.

பிரித்தானியாவில் பல ஆர்வலர்களால் நடாத்தப்பட்ட "நன்கொடை பாகுபாடு அல்ல" எனும் பிரசாரத்தைத் தொடர்ந்து, 2021 இல் இரத்த தான விதிகளில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக, தற்போது தகுதியானது நன்கொடையாளரின் தனிப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன், அது அவர்கள் எந்த குழுவை பிரதிநிதித்துவப்படுத் துகிறார்கள் என்பதை சார்ந்து அல்ல. பாலினம் அல்லது பாலீர்ப்பை பொருட்படுத்தாமல், மூன்று மாதங்களுக்கு முதல் யாராவது ஒரு புதிய துணையுடன் அல்லது பல துணைகளுடன் ஆசனவாயில் வழியாக உடலுறவு கொண்டால், அவர்கள் இரத்த தானம் செய்வதற்கு முன் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டும். ஆகையால், மூன்று மாதங்கள் அல்லது அதற்கும் மேலான காலத்துக்கு ஒரே துணையைக் கொண்ட ஆண்களுடன் புணர்வு கொள்ளும் ஆண்கள் (MSM) இரத்த தானம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். பிரான்ஸ், கனடா, இத்தாலி, ஸ்பெயின் மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளிலும் இரத்த தானக் கொள்கையில் இதே போன்ற மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில், ஜெர்மனி இதேபோன்ற விதிகளை ஏப்ரல் 2023 முதல் அமுல்படுத்துவதாக அறிவித்தது.

அதற்குப் பதிலாக, இலங்கை NBTS வழங்கும் இரத்த தானம் படிவத்தில், மேலே குறிப்பிடப்பட்ட (i) முதல் (v) வரையிலான பிரிவுகளுக்குள் உட்படுபவர்கள் இதற்கு தகுதியற்றவர்கள் அல்லது அவர்களின் துணைகள் இவற்றுக்குள் உள்ளடங்கினால் தகுதியற்றவர்கள் என்பதை நன்கொடையாளர் அறிந்திருக்கிறாரா என்று வினவுவதன் மூலம் ஒருவரின் பாலீர்ப்பினை நேரடியாக ஒப்புக்கொள்ள நேரிடுகிறது.

அவ்வாறிருக்கும் போது இவ்வாறான ஓர் அணுகுமுறை எந்தவோர் இரத்த தான வழங்குனரையும் அவர்கள் இரத்த தானம் செய்ய அவர்களுக்கு இருக்கும் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு தமது பாலீர்ப்பு தொடர்பாக ஏமாற்ற ஊக்குவிக்கும். இது தொடர்பான அக்கறையுடைய நபர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களின் போது, தன் பாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் இருபாலீர்ப்புள்ள ஆண்கள் இரத்த வழங்குனர்களாக இருக்கும் பட்சத்தில் தங்களை MSMகளாக அடையாளப்படுத்தாமல் அல்லது இரத்த தானம் செய்வதற்காக கேட்கப்படும் வெவ்வேறு விதமான கேள்விக்கு வேறுபட்ட பதிலை வழங்க விரும்புவதைக் குறிப்பிட்டுள்ளனர்.

சில வேளைகளில், அவர்கள் தங்களை MSMகளாக அடையாளம் கண்டுகொண்டாலும், தனிப்பட்ட இடர் மதிப்பீட்டிற்குப் பின்னரே அவர்கள் இரத்த தானம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இரத்த தானம் செய்வதோடு தொடர்புடைய சாத்தியமான அபாயங்கள் பற்றிய ஒவ்வொருவரின் தனிப்பட்ட மதிப்பீடு உண்மையில் பாலீர்ப்பின் அடிப்படையிலான முழுமையான தடைக்கான தேவையை நிராகரிக்கிறது, ஏனெனில் NBTS அனைத்து HIV, ஹெபடைடிஸ் B மற்றும் C, சிபிலிஸ் மற்றும் மலேரியாவுக்கு உலக சுகாதார நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி தானம் செய்யப்படட்ட அனைத்து இரத்தத்தையும் ஏலவே பரீசீலனை செய்கின்றது.

இலங்கையின் காலம் கடந்த இரத்த தானக் கொள்கையை சீர்திருத்துவதன் நன்மையான தாக்கங்கள் பன்மடங்கு உள்ளன. முதலாவதாக, இடர் மதிப்பீடு தனிப்பட்ட நடத்தையை அடிப்படையாகக் கொண்டிருத்தல் - மற்றும் அது பாலீர்ப்பினை பாகுபாட்டுக்குள்ளாக்கும் அல்லது சமூகக் களங்கத்தை தோற்றுவிக்கும் முறையுடன் தொடர்புபட்டதல்ல - அவ்வாறிருக்கும் போது "அச்சுறுத்தலான நடத்தைகள்" தொடர்பான கேள்விகளுக்கு துல்லியமான மற்றும் உண்மையுள்ள பதில்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இரண்டாவதாக, ஒரே பால் பாலியல் உறவுகள் மற்றும் எச்.ஐ.வி ஆகியவற்றில் குறைவான சமூகக் களங்கம் இருக்கும்போது, அதிகமான மக்கள் எச்.ஐ.வி பரிசோதனைக்கு முன்வருவார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இந்த வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்யும் போது தன்பாலீர்ப்புள்ள மற்றும் இருபால் ஈர்ப்புள்ளோர் அதிகளவான எச்ஐவி பரிசோதனையை செய்துகொள்ள ஊக்குவிக்கும். பரிசோதனையின் காரணமாக மக்கள் தங்கள் எச்.ஐ.வி நிலையைப் பற்றி அதிகம் அறிந்திருப்பார்கள், அதன் பரவலை குறைக்கவும் சிகிச்சை பெறவும் அணுகுவார்கள். மூன்றாவதாக, வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்வது, பொது சுகாதார அதிகாரிகளுக்கு இரத்தத்திற்கான தேவையை பூர்த்தி செய்வதற்கான திறனை மேம்படுத்தும் .

ஒரே பால் பாலீர்ப்பு என்பது "அச்சுறுத்தலான நடத்தைகள்" என அடையாளம் காணப்பட்டால், பாகுபாடு, களங்கம், ஏளனம் மற்றும் துன்புறுத்தலுக்கு அவர்களை உள்ளாக்குவதோமடு அவர்களை மனிதத்தன்மையற்றவர்கள் என தோற்றப்பாட்டை உருவாக்குகிறது.

தற்போதுள்ள பாரபட்சமான வழிகாட்டுதல்களை சீர்திருத்துவது இரத்த தானத்தில் மதிப்புமிக்க தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

# உணவுச் சட்ட விதிமுறைகளை மீறும் உணவகங்கள் மீது கடுமையான நடவடிக்கை

■ எம்.எஸ்.எம் ஹனீபா



பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில், பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனைக்காக வைத்திருந்த நான்கு உணவக உரிமையாளர்களுக்கு எதிராக, பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 70 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு, எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.யூ அப்துல் ஸமட் நேற்று (05) தெரிவித்தார்.

பொத்துவில் சகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட உணவகங்கள், வர்த்தக நிலையங்கள், பேக்கரிகள், ஹோட்டல்கள், உணவு கையாளும் நிலையங்கள் ஆகியவற்றில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது, பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை, பாவித்த தேங்காய் எண்ணெயை மீண்டும் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

உணவு சட்ட விதிமுறைகள், நுகர்வோர் விவகார சட்டங்கள் மற்றும் அதன் விதிமுறைகளுக்கு அமைய உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும் உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமெனவும் உணவகங்களில் உணவு கையாள்பவர்கள் உரிய மருத்துவ சான்றிதழைத் தன்வசம் வைத்திருக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

இதனை மீறி செயற்படும் உணவகங்கள் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில், அவற்றை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.







## பெண்மையை போற்றுவோம்

■ அபு அலா

திருகோணமலை அன்பின் பாதை சமூகம் மற்றும் எண்ணம் போல் வாழ்க்கை இணைந்து நடத்திய 'பெண்மையை போற்றுவோம்' எனும் தொனிப்பொருளில் சர்வேதச மகளிர் தின நிகழ்வும், மகுடம் வழங்கும் ஸ்ரீ ரஞ்சனியின் (கனடா) 'ஒன்றே வேறே' சிறுகதை நூல் வெளியீடும் திருகோணமலை குளக்கோட்டம் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (01) நடைபெற்றது.

திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிரிஸ்டியன் நோயல் இமானுவேல் ஆண்டகை பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாயளர் திருமதி ஜே.ஜே முரளிதரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீபதி, கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி இந்திரமதி வேதநாயகம், சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அன்பின் பாதை சமூகத்தின் நிறுவுனர் திருமதி றொஸில்டா அன்டனின் சமூக சேவைகளைப் பாராட்டி கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாயளர் திருமதி ஜே.ஜே முரளிதரனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும், மகுடம் வழங்கும் ஸ்ரீ ரஞ்சனியின் (கனடா) 'ஒன்றே வேறே' சிறுகதை நூல் வெளியீட்டின் முதற்பிரதியை தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. ஸ்ரீபதி பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## பாரம்பரிய வைத்தியர்களுக்கான செயலமர்வு





■ அபு அலா

சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான ஒருநாள் பயிற்சி செயலமர்வு செவ்வாய்க்கிழமை (04) தம்பலகாமம் - முள்ளிப்பொத்தானை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி. தயாநந்தன் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ. ஸ்ரீதர், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி. சிவகுமார் உள்ளிட்ட வைத்தியர்களும் திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில்

## இரத்தத்துக்கு தட்டுப்பாடு

■ ஏ.எச்.ஏ ஹூஸைன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் குருதிக் கொடையாளிகள் விரைந்துவந்து இரத்ததானம் செய்யுமாறு அவ்வைத்தியாலை இரத்த வங்கி பிரிவின் வைத்திய அதிகாரி கீர்த்திகா மதனழகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா வகையான இரத்தத்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் எனவே, உயிர் காக்கும் உன்னத சேவையை மேற்கொள்ள குருதிக் கொடையாளர்களின் மகத்தான கொடை தேவைப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர்

## விவசாயிகளிடம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்



■ ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராசா, மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு முக்கிய அறிவித்தலை விடுத்துள்ளார்.

விவசாய அமைச்சால், இலங்கை பூராகவும் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக அடிக்கட்டுப்பசளை (ரிஎஸ்பி) உரம் வழங்கப்பட்டுவரும் நிலையில், இதுவரை மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் 40% வரையே பெற்றுள்ளனர். எதிர்வரும் 10 திகதியுடன் உர விநியோகம் நிறுத்தப்பட உள்ளதால், அதற்கு முன்னர் தங்களுக்கான உரத்தைப் பெற்றுக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட விவசாயிகளிடம் மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்தோடு, சீனா அரசாங்கத்தின் உதவியுடன் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுவரும் டீசலுக்கான காலம் முடிவடைந்த நிலையில், 14.04.2023 வரை நீட்டிக்கப்பட்டு உள்ளதெனவும், அதையும் குறித்த கால எல்லைக்குள் பெற்றுக்கொண்டு மாவட்டத்தின் விவசாய நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழர்களின் சமஷ்டி கோரிக்கையை

# சிங்கள மக்களிடம் மறைக்க முயல்கிறார் வீரசேகர

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியில், "தமிழ் மக்கள் சமஷ்டியை கோரவில்லை; தமிழ் அரசியல்வாதிகளும் பிரிவினையை விரும்பும் புலம்பெயர் அமைப்புகளும் தான் கோருகின்றனர்" என அப்பட்டமான இனவாத பொய்யுரைப்பை கட்டவிழ்த்து விட்டுள்ளார் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தமிழர்களைப் பொறுத்தவரை, இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து, தங்களது மறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமையை வேண்டி 74 ஆண்டுகளாக சமஷ்டி கோரிக்கையை ஏற்றுக் கொள்கின்ற அரசியல் கட்சிகளுக்கே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். இது ஒவ்வொரு தேர்தல்களிலும் நிரூபணமாகியுள்ளது. இந்த உண்மையை மறைத்து, இனவாதத்தை தூண்டுகிறார் வீரசேகர.

1952, 1956, 1960 ஆம் ஆண்டுகளில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் தமிழ்க் கட்சிகள் தேர்தல்களில் மக்களை நோக்கி, 'சோறா, சமஷ்டியா வேண்டும்' எனக் கேட்ட போது, சுதந்திர சமஷ்டியே வேண்டும் என பெரும்பான்மை மக்கள் ஆணையை வழங்கினர். இதை இலங்கையின் தேர்தல் வரலாறு தெளிவாகக் கூறுகிறது.

1977 இல் நடைபெற்ற தேர்தலில் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்க் கட்சிகளின் கூட்டணி முன் வைத்த சமஷ்டி கோரிக்கையை தாண்டி, தனிநாட்டுக் கோரிக்கைக்கு 99% மக்கள் ஆணை வழங்கினார்கள். உண்மையாக தனி நாட்டுக்கான ஒரு பொதுசன வாக்கெடுப்பாகவே அது அமைந்தது.

1977 இல் தமிழர் தாயகத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் பிரிந்து செல்வதற்கான மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். சுதந்திர தாகத்துடன் தொடர்ந்து தங்களது அபிலாஷையை மக்கள் ஆணை மூலம் வெளிப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை இழிபுபடுத்தி, இனவாதத் தீயை வளர்த்து அதிகாரத்தைப் பெற நினைக்கும் பித்தலாட்ட நடவடிக்கைகளை சரத் வீரசேகர கைவிட வேண்டும் என்றார்.

## வெடி பொருட்கள் விழிப்புணர்வு சர்வதேச தினம்









■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் செயற்பாட்டு உதவிகளுக்கான சர்வதேச தினம் செவ்வாய்க்கிழமை (04) கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. ஸ்ரீமோகனனும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் டபிள்யூ.எம் ஆனந்த (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

வெடி பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் செயற்பாட்டு உதவிகளுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றன.

குறித்த விளையாட்டுப் போட்டியில் SHARP, HALO TRUST, MAG, DASH, SLA HDU ஆகிய நிறுவனங்களின் அணிகள், ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகளில் கலந்து கொண்டிருந்தன.

பைக்கட் பால் குடித்த

## முன்பள்ளி மாணவர்கள் வைத்தியசாலையில்



■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, பாரதிபுரம் கிராமத்தில் உள்ள முன்பள்ளி ஒன்றில், நேற்று முன்தினம் (04) மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பால் பைக்கட் ஒவ்வாமையால் 13 மாணவர்கள் வாந்தி, வயிற்றோட்டம் ஏற்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்கும் நடைமுறைக்கு ஊடாக, நிறுவனமொன்று பொதியிடப்பட்ட பால் பைக்கற்றுகளை வழங்கியிருந்தது. இதை அருந்திய பின்னரே, மாணவர்களுக்கு வாந்தியும் வயிற்றோட்டமும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, உடனடியாக மாணவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அங்கு பல வைத்தியர்கள் ஒன்றிணைந்து உடனடியாக சிகிச்சையளித்தனர். மாணவர்கள் எவரும் ஆபத்தான நிலைமையில் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பால் பைக்கட்டின் மாதிரிகளை கொழும்பில் உள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

## வவுனியாவில் பத்மநாபாவின் சிலை திறப்பு

■ க. அகரன்



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபாவின் சிலை திறப்புவிழா நிகழ்வு நேற்று (05) இடம்பெற்றது.

வவுனியா மணிக்கூட்டுகோபுர சந்திக்கு அருகாமையில் புதிதாக நிறுவப்பட்ட சிலையருகில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் கே. அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை அதிதியாக கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் கலந்துகொண்டு சிலைக்கு மலர்மாலை அணிவித்து, திரைச்சீலையை திறந்துவைத்தார். அதனை தொடர்ந்து ஏனைய முக்கியஸ்தர்கள், மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலை கழகம், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி ஆகிய கட்சிகளின் முக்கிஸ்தர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன், உறுப்பினர்களான ஜி.ரி லிங்கநாதன், இ. இந்திரராஜா, ம. தியாகராஜா, நகர சபை முன்னாள் தவிசாளர் இ. கௌதமன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மன்னாரில் சுய தொழிலுக்கான கோழிகள் வழங்கி வைப்பு



■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார், மெசிடோ நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, சுயதொழிலை மேம்படுத்தும் வகையில் ஒரு தொகுதி கோழிகளும் மூன்றாவது கட்டமாக உலர் உணவு பொதிகளும் செவ்வாய்க்கிழமை (04) வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி, மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளடங்கலாக 180 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு வந்தன.

மேலும், மூன்று மாதம் முடியும் போது, அவர்கள் விரும்பிய சுய தொழிலை மேற்கொள்ள சுமார் 15 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சுய தொழில் மூலப்பொருட்களாக, கோழிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் மெசிடோ நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, விற்றோல் திட்டத்தின் வடமாகாண கண்காணிப்பு இணைப்பாளர் எஸ்.ஏ ரெக்ஸ், மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டு குறித்த உதவித் திட்டத்தை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழுபோ கோர விபத்தில் மூவர் பலி: சிவனுக்கு காயம்

ராமு தனராஜா, சுமணசிறி குணதிலக்க



வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாழபோ பகுதியில் இடம்பெற்ற விபத்தில், மூவர் மரணமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம், செவ்வாய்க்கிழமை (04) இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த 11 வயதான சிறுவன், சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கெப் ரக வாகனமும், ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

ஓட்டோவில் பயணித்த தனமல்வில பொலிஸ் நிலைய சாஜன்ட், அவரது தந்தை மற்றும் சாஜன்டின் மனைவி ஆகியோர் பலியாகியுள்ளனர்.

குறித்த மூவரின் சடலமும் வெல்லவாய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கெப் ரக வாகனத்தின் சாரதி உட்பட மூவரை கைது செய்துள்ளனர். கெப் ரக வாகனத்தின் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் என்பதுடன், அவரிடம் செல்லுப்படியான வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை.

சம்பவத்தை அடுத்து வெல்லவாய பொலிஸ் நிலையத்துக்கு முன் ஒன்றுதிரண்ட பொதுமக்கள், சந்தேகநபர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்து கோஷமெழுப்பியதால், அவர்கள் மூவரும் புத்தல பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

# பேரன் கொத்தியதில் தாத்தா, பாட்டி மரணம்

ராமு தனராஜா

பல்லகெடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்லகெடுவ பகுதியில் 80 வயதுடைய தாத்தாவையும் 70 வயதுடைய பாட்டியையும் பேரன் கோடரியால் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான தாத்தாவும் பாட்டியும் தெமோதர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போது தாத்தா அங்கு உயிரிழந்தார்.

பாட்டி மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள போதும் அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது. சந்தேகநபரான பேரன் தலைமறைவாகி உள்ளதாக பல்லகெடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பேரன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனத் தெரிவித்த பல்லகெடுவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# அறிவுச் சுடர் போட்டியில் வெற்றி

ஏ.எம்.ஜலீல்




கொழும்பு, கொமடிடீஸ் நிறுவனமும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையும் இணைந்து கண்டி பதியூதீன் பெண்கள் தேசிய பாடசாலையில் கட்டுகஸ்தோட்டை சாஹிரா, உக்குவளை குரீவல ஹமீதியா கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கிடையில் அறிவுச் சுடர் போட்டியை நடத்தியது.

அதில், உக்குவளை ஹமீதயா கல்லூரி 52 புள்ளிகளால் வெற்றிபெற்றது. அதில் பங்கேற்றிருந்த மாணவர்களுக்கு, குறிப்பிட்ட நிறுவனத்தின் தயாரிப்புகள் பரிசுகளாக வழங்கப்பட்டன.





# 'தேயிலைச் சாயம்' புகைப்படக் கண்காட்சி

இலங்கைக்கு மலையக மக்கள் வருகை தந்து இருநூறு வருட பூர்த்தியை முன்னிட்டு இரத்தினபுரி கலை கேந்திர மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தேயிலைச் சாயம்' எனும் தொனிப்பொருளில் புகைப்படக் கண்காட்சி இரத்தினபுரி, லெல்லுபிட்டிய சில்வரே ஹோட்டல் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (04) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

4 தினங்கள் நடைபெறும் இந்தப் புகைப்படக் கண்காட்சி, இன்றும் (06) நாளையும் (07) நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக மத குருமார்கள் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் மஞ்சுளா இதிகாவெல, GIZ நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் நிக்லஸ் லம்பாவா மற்றும் பாடசாலை மாணவர்கள், அதிபர் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(சிவா ஸ்ரீதரராவ்)

## இரத்தினபுரி மாவட்டத்தில்

# இனவன்முறை இன்றி வாழவேண்டும்

உமாமகேஸ்வரி

இரத்தினபுரி மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் இனவன்முறை இன்றி அனைவரும் ஒருதாய் மக்கள் போல் ஒற்றுமையாக வாழ வேண்டும். என்று இரத்தினபுரி கலாகூடத்தின் நிறைவேற்றதிகாரி நந்தலால் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

இரத்தினபுரி கலைக்கூடத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி லெல்லோபிட்டிய சில்வரே உணவகத்தில் 'தேயிலை சாயம்' என்ற தலைப்பில் புகைப்படக்கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (04) ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கண்காட்சி, ஏப்ரல் 7ஆம் திகதி வரையிலும் நடைபெறும்.

நாட்டில் பல பாகங்களிலும் நடைபெற்ற இக்கண்காட்சியானது முதன் முறையாக இரத்தினபுரி மாவட்டத்தில் தற்போது நடைபெறுகின்றது.

ஊவா சக்தி நிறுவனம், எஸ்.ஆர்.பி. நிறுவனம், மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம், ஜீ.ஐ.இசட். நிறுவனம், பிரிட்டிஷ் கவுன்ஸில், ஜெர்மன் கோப்பரேசன் உள்ளிட்ட பல நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும் அப்புகைப்படக் கண்காட்சியில் மலையக மக்களின் தினசரி வாழ்க்கை, அவர்களின் தொழில், அவர்களின் குழந்தைகளின் கல்வி முறை குறித்த பல விடயங்களை தெட்ட தெளிவாக வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியின் இரண்டாம் நிகழ்வினை நேற்று (5) உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும் அவர் அவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய நிறைவேற்றதிகாரி நந்தலால் விக்கிரமசூரிய கூறியதாவது:

இரத்தினபுரி மாவட்டம் இன வன்முறைக்கு பெயர் பெற்ற மாவட்டமாகும். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் தாக்கப்பட்டனர். குறிப்பாக 30 வருட யுத்தம் நடைபெற்ற போது அதற்கு பிரதான காரணம் தோட்ட தமிழ் மக்கள்தான் எனக்கூறி, இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அப்பாவி தோட்ட மக்கள் பெரும்பான்மையின மக்களால் தாக்கப்பட்டனர். அவர்களது உடமைகளும் சேதமாக்கப்பட்டன.



இனிவரும் காலங்களில் இவ்வாறு இடம் பெறக்கூடாது என்பதற்காகவே இம்மாவட்டத்தில் இப்புகைப்படக் கண்காட்சி நடத்தப்படுகின்றது. இக்கண்காட்சி நான்கு தரப்பினருக்கு காண்பிக்கப்பட வேண்டும் என்பது எமது ஆசை ஆகும் என்றார்.

200 வருடங்களுக்கு முன் இலங்கை வந்த பெருந்தோட்ட மக்கள் படுகின்ற கஷ்டங்களை சிங்கள மக்கள் புரிந்து கொள்வதுடன் தோட்ட மக்கள் இனவன்செயலில் அல்லது இனரீதியாக பாதிக்கபப்ட்டால் அதற்கெதிராக தென்பகுதியிலுள்ள பெரும்பான்மையின மாணவர்கள் குரல் கொடுப்பதுடன் அதனை தடுக்க முன் வரவேண்டும்.

அவர்களும் (மலையக மக்களும்) இந்நாட்டில் பிறந்து வளர்ந்து வருபவர்கள்; அவர்களும் பெரும்பான்மையின மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் சலுகைகளையும் முழுமையாக அனுபவிக்க வேண்டும். அதற்கு பெரும்பான்மையின மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

### தென்பகுதி பெரும்பான்மையின மக்களுக்கு...

அதாவது மலையக மக்கள் அன்றாடம் தேயிலை தோட்டத்தில் சொல்ல முடியாத இன்னல்களை அனுபவிக்கின்றனர். அவர்கள் தேயிலை மலைகளில் தேயிலை பறிக்க படும்பாடு சொல்லில் அடங்காது அதனால் அதனை புகைப்படம் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு அல்லல்பட்டு பறிக்கும் தேயிலை கொழுந்தை தூளாக்கி அதனை ஏற்றுமதி செய்து அதன் ஊடாக வெளிநாட்டிலிருந்து பெற்ற அந்நிய செலாவணி (டொலர்) மூலம் இலங்கையில் இலவசமாக கல்வி கற்று வெளிநாட்டில் பணிபுரிய படையெடுக்கும் புத்திஜீவிகளுக்கு உணர்த்தும் பொருட்டும் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### மலையக பாடசாலையில் கல்வி கற்கும் குறிப்பாக இரத்தினபுரி மாவட்ட தமிழ் மாணவர்களுக்கு....

கடந்த 200 வருடங்களாக உங்களது பாட்டன் தொடக்கம் இன்று வரை மலையகம் மறுமலர்ச்சியடையவில்லை. அதனை மறுசீரமைக்க உங்களால் முடியும். அதற்கு சிறந்த கல்வியை பெற வேண்டுமென்பதனை உங்களுக்கு உணர்த்துவதற்காகவும் அமைந்துள்ளது.

### மலையகத்தில் வாழும் பெரியோர்கள் மற்றும் மலையக பெற்றோர்களுக்கு..

200 வருடகால மலையகத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் ஒன்று மட்டும் இன்று வரை மாறவில்லை. அதாவது மலையக மக்ககளில் சிலர் மட்டும் குடிபோதையிலிருந்து இன்று வரை மீளவில்லை. எதற்காக மது அருந்த வேண்டும் என்பதனை சிந்திக்க வேண்டும். மதுவினால் மலையகம் அழிந்து வருகின்றது. அதிலிருந்து மீண்டு குடிபோதைக்கு செலவிடும் பணத்தை தமது பிள்ளைகளின் கல்விக்காக செலவிட வேண்டும்; என்பதற்காகவும் நாமும் நமது மூத்தோரும் பட்ட, படுகின்ற கஷ்டங்கள் நமக்கு தெரிய வேண்டும் என்பதற்காகவும் இப்புகைப்பட கண்காட்சி நடத்தப்படுகின்றது.

இப்புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டு வெளியே செல்லும் ஒவ்வொருவருக்கும் தன்னில் மாற்றம் ஏற்படும். அவ்வாறு மாற்றமடையாது விட்டால் அவர் மனிக குலத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்றார்.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல வர்த்தகரும் தேயிலை உற்பத்தியாளரும் ஏற்றுமதியாளருமான சமன் உபசேன, சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி சரத் விஜயகுணவர்தன, இரத்தினபுரி பிரதே சபையின் முன்னாள் உறுப்பினர் கோபால் தம்பிராஜ் உள்ளிட்ட பெருந்திரளான தமிழ், சிங்கள மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதி ரணிலால் மக்களுக்கு நிவாரணம்

சுதத் எச்.எம்.ஹேவா

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. பியதாஸ தெரிவித்தார்.

அவருடைய கினிகத்ஹேன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்றுக்கொண்டு இருக்காவிடின் நாட்டை கட்டியெழுப்ப முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருக்கும். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுடன் கலந்துரையாடி, நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை முன்வைத்ததன் பின்னர் கடன் கிடைத்துள்ளது என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனில் முதலாவது தொகுதி கிடைத்துள்ளது. ஆகையால், பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. எரிபொருள், காஸ் வரிசைகள் குறைந்துள்ளன. மின்வெட்டு அமுல்படுத்தல் முற்றாக கைவிடப்பட்டுள்ளது என்றார்.

# கபரகலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டு. உணர்வாளர்கள் உதவிக்கரம்

எம் எஸ் எம் நூர்தீன்

பண்டாரவளை, கபரகலை பகுதியில் மார்ச் மாதம் 19 திகதி ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை, மட்டக்களப்பு மாவட்ட படப்பிடிப்பு உரிமையாளர் சங்கம், சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் நண்பர்கள், ஈரோஸ் அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் மாக்கந்தை முகாமுக்குச்சென்று வழங்கி வைத்துள்ளனர்.

மண்சரிவு அனர்த்தத்தில், 75 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன், உலருணவு பொதிகளை கையளித்தனர். அத்துடன், சமைத்த உணவையும் வழங்கி வைத்துள்ளனர்.

அத்தோடு, இரண்டு கட்டங்களாக இவர்களுக்கு உதவிய மட்டக்களப்பு மாவட்ட படப்பிடிப்பு உரிமையாளர் சங்கத்தினர் மிக விரைவில் இவர்களுக்கான 3 ஆம் கட்ட உதவியையும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# சிறுவர் பூங்கா பகுதியில் மூன்று குளவிக் கூடுகள்



செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உரித்தான சிறுவர் பூங்கா பகுதியில் உள்ள மூன்று மரங்களில் மூன்று குளவி கூடுகள் உள்ளன.

அந்தக் கூடுகளில் உள்ள குளவிகளால் அங்கு விளையாடும் சிறார்களுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை கவனம் செலுத்தி, அந்த குளவிக்கூடுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மரக்கிளைகளிலேயே குளவிகள் கூடுகளைக் கட்டியுள்ளன. கிளைகள் முறிந்து விழுந்தால், பாரிய ஆபத்துகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# பயிற்சி நிகழ்வு

ராமு தனராஜா

ஹாலி-எல அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபை மற்றும் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 08 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு 'திருமுறை பண்ணிசைத் திருத்தல முற்றோதல்' பயிற்சி நிகழ்வு ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நிகழ்வின் குருவாக தமிழ்நாட்டின் கோபி, ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் திருமடத்தின் திருக்கயிலாய பரம்பரை, ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கர்ணம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் கலந்து கொண்டு ஓதுதல் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நிகழ்வில் கலந்துகொண்டு திருமுறைகளை முறைப்படி ஓதும் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# முடிச்சுமாறிகள், போலித்தாள்கள் தொடர்பில் விழிப்பாக இருக்கவும்

ஒவ்வொரு பெருநாளும் ஒவ்வொருவருக்கும் விசேடமாகத்தான் இருக்கும். சில வேளைகளில் ஊரே களைக்கட்டியிருக்கும். நகரங்களில் வியாபாரம் சூடுபிடித்திருக்கும்; வீதியோரக் கடைகளுக்கு குறைவே இருக்காது. அவ்வாறு கொண்டாடப்பட்ட காலம், கொரோவுடன் காணாமற்போயிருந்தது.

அடுத்தடுத்த வருடங்களில் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தமையால், பெரும்பாலான மக்கள் பெருநாள்களில் கரிசனை காட்டவில்லை. இருப்பதைக்கொண்டு மிகவும் கச்சிதமான முறையில் கொண்டாடிவிட்டனர். ஆனால், பிறக்கவிருக்கும் தமிழ்-சிங்கள புத்தாண்டை கோலாகலமாக வரவேற்பதற்கு மக்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றனர் என்பதை அவதானிக்கக்கூடியதாய் இருக்கின்றது.

அதற்கு ஏற்றால்போல, அரசாங்கமும் சில சலுகைகளை வழங்கியுள்ளது. சில தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு இயலுமான அளவில், வரப்பிரசாதங்களை பணியாளர்களுக்கு வழங்கியுள்ளன. இன்னும் சில நிறுவனங்கள் ஒருபடி மேல் சென்று 'போனஸ்' வழங்கியுள்ளது. ஆக, மக்களின் கைகளில் ஓரளவுக்கு பணம் புரளுகின்றது.

இம்முறையாவது குடும்பத்தினருடன் மிகவும் சந்தோஷமாக பெருநாளை கொண்டாட வேண்டுமென நினைத்த பலரும், இவ்வாரத்தின் இறுதியில் இருந்து 'பெருநாள் கொள்வனவு'க்கு இறங்கிவிடுவார்கள், குடும்பத்தாருடன் பெருநகரங்களுக்கு படையெடுத்துவிடுவார்கள்.

குடும்பமே இல்லையென அறிந்துகொண்டதும், கள்வர்கள் வீடுகளுக்குள் புகுந்து சுத்தம் செய்துவிடக்கூடும். அவ்வாறான சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன என்பதை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

அதுமட்டுமன்றி மோசடிகளும் இடம்பெறக்கூடும்; முடிச்சுமாறிகள் தங்களுடைய விளையாட்டை காட்டிவிடுவர். பணப்பையை எடுத்துச்செல்வோர் கவனமாக இருக்கவேண்டும். தங்களுக்குத் தேவையான பணத்தை மட்டும், இலகுவாக எடுக்கும் வகையில் வைத்துக்கொண்டு, ஏனைய பணம், தங்க ஆபரணங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது நல்லது.

இவற்றுக்கெல்லாம் அப்பால், போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விட்டுவிடுவர். அவை தொடர்பில் தெளிவாக இருக்கவேண்டும். நுகர்வோர் மட்டுமன்றி வர்த்தகர்களும் போலி நாணயத்தாள்கள் குறித்து விழிப்பாக இருத்தல் அவசியம். அதேபோல, சாதாரண மக்களை ஏமாற்றிவிடும் வர்த்தகர்களையும் இனங்கண்டு கொள்ளவேண்டும்.

இல்லையேல், பெருநாளை வெகுசிறப்பாக கொண்டாடவேண்டும் என்ற கனவு கலைந்துவிடும். எரிபொருள் கோட்டா அதிகரித்துள்ளதால், கண்களை மூடிக்கொண்டு வாகனங்களை செலுத்தும் எண்ணத்தை முற்றாக கைவிடவேண்டும். அதனால், அப்பாவி மனித உயிர்கள் பலியாகிவிடும். பொதுப் போக்குவரத்தில் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவதை தவிர்ப்பதும் சிறந்தது.

குறிப்பாக சிறுவர்களுக்கு தங்க ஆபரணங்களை அணிவித்து பெருநகரங்களுக்கு அழைத்துச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு பொலிஸார். அறிவுறுத்தியுள்ளனர். போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொருவரும் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதே சிறந்தது.

தமிழ்-சிங்கள புத்தாண்டை சிறப்பாக கொண்டாடவேண்டுமென கனவு காண்பவர்கள், தங்களுடைய கனவை நினைவாக்க வேண்டுமாயின் முடிச்சு மாறிகளிடம் இருந்து விழிப்பாகவும், போலி நாணயத்தாள்கள் குறித்து அவதானமாகவும் இருத்தல் அவசியமாகும்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்



உண்மையில் சொரூபம் சிலசமயங்களில் மறைபொருளாகவும் இருக்கும். ஆனால், அதன் வெளிப்பாடு முழு உலகுக்கும் வெளிச்சமூட்டிவிடும்.

தீயோர் அநீதி செய்தால், உண்மையின் தாக்கம் மிகக் கடுமையாக பெரும் தாக்கங்களை உண்டுபண்ணிவிடும். கெட்டவர்களின் செயல்கள், அவரை மட்டுமல்ல; அவர் பரம்பரையையே தாக்கிவிடலாம்.

மிகவும் இலகுவாக வாழ்வதற்கான வழிமுறை, நேர்மையுடன் வாழ்வதாகும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்வதாகும்.

சஞ்சலம், சபலம், தேவையற்ற ஆசைகள் என்பன மனிதரைப் புரட்டிப்போட்டு விடுகின்றன. ஆனால், மாந்தர்கள் அதில் உண்டாகும் அழிவை உணருவதில்லை. நல்ல வழியில் வாழவேண்டும் என எண்ணுவார்கள். ஆனால், வேதாளம் பழையபடி மரத்தில் ஏறிவிடும்.

ஒருவர் திருந்தி வாழ, தடையை ஏற்படுத்தும் காரணிகளில், அவரது சுற்றாடலும் முக்கிய காரணியாகும். பாவங்களின் கொடுமைகளை உணராதவரை, வாழ்வில் மேன்மை அடைவது எங்ஙனம்?

எளிமையாக வாழும் முறைகளில் ஆர்வம் பெருகினால், ஆசையில் இருந்து விடுபட முடியும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### ஜனாதிபதி தேர்தலுக்காக

# ரணில் ஆடும் சதுரங்கம்



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்காக, நாட்டு மக்களைத் தயார்ப்படுத்தும் வேலைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டு வருகின்றார்.

ஏற்கெனவே நடந்து முடிந்திருக்க வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, திட்டமிட்ட ரீதியில் ஒத்திப்போட வைத்து, போக்குக் காட்டிவரும் ரணில், இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில், ஜனாதிபதி தேர்தலை நடத்தி, அதில் வெற்றிபெற நினைக்கிறார்.

அதற்காக, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து, பிரபலமான முகங்களை எல்லாம் கழட்டி எடுக்கும் வேலைகளில் கவனமாக இருக்கிறார். அதன் ஒருகட்டமாக, ஹர்ச டி சில்வா, எரான் விக்கிரமரட்ன, கபீர் ஹாசிம் உள்ளிட்டவர்கள், ரணிலோடு இணைந்து, முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை ஏற்பார்கள் என்று புனைவுச் செய்திகள் பரப்பப்படுகின்றன.

பாராளுமன்றத்தில் இருக்கும் பொருளாதார நிபுணர்களாக கருதப்படுபவர்களில், ஹர்சவும் எரானும் முக்கியமானவர்கள். அவர்களைத் தேர்தல் அரசியலுக்கு அழைத்து வந்தவர் ரணில்தான்.

கடந்த பொதுத் தேர்தலில், ரணிலோடு முரண்பட்டுக் கொண்டு சஜித் அமைத்த ஐக்கிய மக்கள் சக்தியில் அவர்கள் இருவரும் இணைந்தாலும், ரணில் மீது 'அரசியல் குரு' என்ற ரீதியில் மரியாதை வைத்திருப்பவர்கள். ராஜபக்ஷர்களை விரட்டும் போராட்டத்தை அடுத்து, மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலகினார்; அப்போது, ரணில் பிரதமரானார்.

அந்தத் தருணத்தில், புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டிருந்தால், அதாவது ரணில் தலைமையிலான அரசாங்கம், குறிப்பாக ராஜபக்ஷ ஆதரவு இல்லாமல் அமைக்கப்பட்டிருந்தால், அதில் ஐக்கிய மக்கள் சக்தியில் பெருமளவான உறுப்பினர்கள் இணைந்து கொண்டிருப்பார்கள். ஆனால், அது சாத்தியமாகவில்லை.

ரணில் பிரதமராகி, தன்னை ஜனாதிபதி பதவிக்காக தயார்படுத்திக் கொண்டிருந்த காலப்பகுதியில், கோட்டபாய ராஜபக்ஷவை துரத்தியடிக்கும் போராட்டத்தை ஊக்குவிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அப்போது, அவர் மஹிந்தவோடு மிக இரகசியமான, திட்டங்கள் வகுத்து இணைந்து இயங்கினார். அதனால்தான், ஜனாதிபதி பதவியில் இருந்து, கோட்டா தப்பியோடும் நிலை ஏற்பட்டது.

மஹிந்தவுக்கும் ரணிலுக்கும் இடையிலான இணக்கப்பாடு என்பது, நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை பாதுகாப்பது என்ற ஒன்று மட்டுமே ஆகும். அதற்காக, ரணில் இழுக்கும் எந்தத் திசைக்கும் நகர்வதற்கு மஹிந்த தயாராக இருந்தார். அதனால்தான், பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்வில், பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ கட்டுப்பாட்டில் இருந்த உறுப்பினர்கள் ரணிலை ஆதரித்தார்கள். ரணில் வென்றதும், மஹிந்தவின் இல்லம் தேடிச் சென்று, சில மணிநேரம் பேசிவிட்டும் சென்றார்.

ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் இடையிலான இந்த இணக்கப்பாடு, பொது வெளியில் அப்பட்டமாக வெளிப்பட்டதால் மட்டுமே, ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு செல்வதற்கு பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தயங்கினார்கள். ஏனெனில், பொதுத் தேர்தல் ஒன்று வரும் போது, ராஜபக்ஷர்களோடு இணக்கத்தோடு இருக்கும் ரணில் அரசாங்கத்தில் இணைந்து கொண்டவர்களை, மக்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயங்குவார்கள். அதனால், தோல்வியடைய வேண்டி வரலாம் என்று எண்ணினார்கள். அதனால், பொதுத் தேர்தல் வரும் வரையில், எதிரணியில் இருப்பதுதான் தேர்தல் வெற்றியை இலகுவாக்கும். இந்த ஒற்றைக் காரணத்தைத் தவிர, சஜித் தலைமைக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதோ, ராஜபக்ஷர்கள் கூட்டை நிராகரிக்க வேண்டும் என்பதோ, ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் பெரும்பாலான உறுப்பினர்களின் எண்ணம் அல்ல. பதவியைத் தக்க வைப்பது என்பது மட்டுமே ஒற்றைக் குறிக்கோள். அதனால்தான், ரணிலால் ஹரீன் பெர்ணான்டோ, மனுஷ நாணயக்கார தவிர வேறு யாரையும் சஜித்திடம் இருந்து அப்போது பிரிக்க முடியவில்லை.

ஆனால், தற்போது நிலைமை வேறு! அண்மித்த நாள்களில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த ரணில் அனுமதிக்கப் போவதில்லை. அதுபோல, பொதுத் தேர்தலும் இப்போதைக்கு இல்லை. எப்படியும் ஜனாதிபதி தேர்தலை நடத்தி, அதில் வெற்றிபெற்றுவிட்டுத்தான், ஏனைய தேர்தல்கள் குறித்து அவர் சிந்திப்பார்.

அதனால், பொதுத் தேர்தல் ஒன்றை நோக்கி நகர்வதற்கு குறைந்தது ஒன்றரை ஆண்டுகளாவது ஆகும். அதுவரை எதுவுமே செய்யாத எதிர்க்கட்சியில் இருப்பதால் பலனில்லை. அதனால் ரணில் அழைப்பை ஏற்று, அமைச்சுப் பதவிகளை ஏற்பதுதான் இப்போது இருக்கும் வழியென்று எதிரணி உறுப்பினர்கள் கருதலாம். அதனை, உத்தியாக்கி ஷர்ச, எரான் போன்றவர்களை இழுத்தெடுக்கலாம் என்று காய்களை நகர்த்துகிறார் ரணில். அதில் அவருக்கு பெரும் இலாபமே இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் உதவியை ரணில் பெற்றுவந்து இருக்கிறார் என்பதை, பெரிய வெற்றியாக வெடி கொளுத்தி, தென் இலங்கையில் சில பகுதிகளில் கொண்டாடினார்கள். ஓர் ஆட்சியாளர் கடன் பெறுவதை, அதுவும் மக்கள் மீது மீள முடியாத வரிகளை விதிக்கும் கண்டிப்பான வரையறைகளுடனான கடனைப் பெறுவதை, வெடி கொளுத்தி கொண்டாடும் நிலைமைதான் நாட்டில் இருக்கிறது என்றால், அதன் யதார்த்தம் எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

அப்படிப்பட்ட அரசியலைத்தான் தென் இலங்கை இவ்வளவு காலமும் புகட்டி வந்திருக்கிறது. ராஜபக்ஷர்கள் சீனாவிடமும் ஏனைய நாடுகளிடமும் பில்லியன்களில் கடன்களை வாங்கி, தங்களின் தேர்தல் வெற்றிகளை இலக்காக்கி நாட்டை சீரழித்தார்கள். அந்தச் சீரழிவின் கொடுங்கரங்களில் இருந்து நாட்டு மக்களால் இன்னும் மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு மீளவே முடியாது.

அந்த உண்மையை சின்னதாக உணர்ந்து கொண்ட தருணத்தில், ராஜபக்ஷர்களை விரட்டுவதற்காக வீதிக்கு இறங்கினார்கள். அந்த மக்களில் ஒரு பகுதியினர் இன்றைக்கு, ரணில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி வந்துவிட்டார் என்பதற்காக அவரை சாதனையாளராக நோக்குகிறார்கள்.

பல நேரங்களில் தென் இலங்கை சக்திகள், நோய்க்கான உண்மையான சிகிச்சைக்குப் பதில், வலி நிவாரணிகளை எடுத்துக் கொள்வதை விரும்புகிறார்கள். அந்த மனநிலையைத்தான், முதலாக வைத்து ரணில், ஜனாதிபதி தேர்தல் கணக்கைப் போடுகிறார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு முதல் தொகுதி கடனை வழங்கியதும், இலங்கை ரூபாயின் பெறுமதி ஒரே நாளில் திடீரென அதிகரித்துக் காட்டப்பட்டது. ஒரு டொலருக்கு எதிராக 360 ரூபாயாக காணப்பட்ட இலங்கை ரூபாயின் பெறுமதி, 306 ரூபாயாக குறைந்தது. இந்தப் பெறுமதி அதிகரிப்பு என்பது திட்டமிட்ட ரீதியில் போலியாக உருவாக்கப்பட்டது. இன்றைக்கு 317 ரூபாய் என்கிற அளவில் பேணப்படுகின்றது. மறுபுறம், அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. சமையல் எரிவாயு, எரிபொருட்களின் விலையும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம், நாட்டின் எதிர்கால பொருளாதார நலன்கள் குறித்து சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகள் அல்ல. மாறாக, தேர்தல்களை இலக்கு வைத்து எடுக்கப்பட்ட முடிவுகள். இப்போதும் அந்த உத்தியை ரணில் கையிலெடுத்து இருக்கிறார்.

ஏற்கெனவே, கடன் வாங்கி வந்ததற்கே வெடிகொளுத்தி ஆரவாரம் காட்டிய மனநிலையுடைய மக்களை, விலை குறைப்பு நாடகம் இன்னும் இளக வைக்கும். தனக்கான வாக்காக மாறும் என்பது ரணிலுக்கு தெரியும். அவர், இப்போது அந்த அறுவடைக்காகத்தான் தயாராகி வருகிறார்.

அதனால்தான், எதிர்க்கட்சியில் இருக்கும் பொருளாதாரம் அறிந்தவர்கள் எல்லாம் தன்னோடு இணைந்திருக்கிறார்கள் என்ற விம்பத்தையும் அவர் காட்ட நினைக்கிறார். அதற்கு, எப்படியாவது ஹர்ச, ஏரான் உள்ளிட்டவர்களின் வருகையை அவர் அதிகமாக நம்புகிறார். இதன்மூலம், தன்னுடைய பொருளாதார திட்டங்கள் நாட்டை மீட்டெடுக்கும் என்று நம்பியதால்தான் அவர்கள், தன்னோடு இணைந்திருக்கிறார்கள் என்பதை மக்களிடம் பெரிய பிரசார உத்தியாக முன்வைக்க முடியும்.

மறுபுறம், ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இடையில் மிகப்பெரிய இழுபறி நீடிக்கிறது. உடலளவில் தளர்ந்துவிட்ட மஹிந்த, நாமல் ராஜபக்ஷவிடம் கட்சியை சேர்ப்பித்துவிட நினைக்கிறார். அதற்கு தடையாக இருக்கும் பசில் ராஜபக்ஷவை அரசியலில் செல்லாக்காசாக்குவதற்கு, ரணில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெல்வது மட்டுமே வழியாக இருக்கும்.

ரணில் வெற்றிபெற்றுவிட்டால், அவரை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. அவரது பதவிக்காலத்தில் பசிலால் எதுவும் செய்ய முடியாது போகும். அதனால், பொதுஜன பெரமுன முழுவதுமாக நாமலின் கைகளுக்குள் வந்துவிடும். அதனால், அடுத்த ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல்களில் ரணிலுக்கு ஒத்துழைப்பதுதான் அரசியல் ராஜதந்திரம். அதன் மூலம், நாமலுக்கான வழியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஏனெனில், ரணிலுக்குப் பின்னால் ஐக்கிய தேசிய கட்சி பெரிய அளவில் வெற்றிபெறுவதற்கு வாய்ப்பில்லை. அதற்கு சஜித் குறுக்கே நிற்பார். அதுபோக, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வென்று பதவியேற்றாலும், அதன் பின்னர், ஜனாதிபதி தேர்தலில் ரணில் போட்டியிட வாய்ப்பில்லை. உடலளவில் அவரும் தளர்ந்துவிடுவார். அதனால், சஜித் எதிர் நாமல் எனும் அரசியல் சூழல் உருவாகும். அந்தப் போட்டியில் ராஜபக்ஷர்கள் அடையாளத்தோடு நாமல் வெல்வது இலகுவானது என்பது மஹிந்தவின் நினைப்பு. அதற்காக, ரணில் இப்போது எந்தப் பக்கம் இழுத்தாலும் அந்தப் பக்கத்துக்குச் செல்வதற்கு அவர் தயாராக இருக்கிறார்.

இப்படியான சூழலை பயன்படுத்திக் கொண்டு, தன்னுடைய வாழ்நாள் கனவான ஜனாதிபதி தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்பதை ரணில் நிறைவேற்றிக் கொள்ள நினைக்கிறார். அதற்காக, அவர் மக்களின் ஜனநாயக உரிமை, எதிர்காலம் என்று எதனை வேண்டுமானாலும் பலிகொடுக்க தயாராக இருக்கிறார்.

ஒரு காலத்தில் தன்னை ஜனநாயக விரும்பியாக காட்டிய ரணில், இன்றைக்கு ஜனாதிபதி பதவிக்காக சர்வாதிகாரியாக மாறி ஆடிக்கொண்டிருக்கிறார்.

## கடிதங்கள்

### புனரமைக்கப்படாமையால் ஆபத்தான நிலையில் குடமுருட்டிகுளம்



கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற குடமுருட்டி குளத்தின் புனரமைப்பு பணிகள், கடந்த ஆண்டுகளில் மேற்கொள்வதாக உறுதியளித்து இருந்தாலும், இதுவரை எந்தவிதமான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக, உலக வங்கியின் நிதி உதவியுடன் குளத்தைப் புனரமைப்பதாக மக்களுக்கு உறுதியளித்திருந்த போதும் அதைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

சுமார் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் 400 மேற்பட்ட விவசாயிகள் பெரும் போகச் செய்கையையும் 300 ஏக்கர் தொடக்கம் 650 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கையையும் மேற்கொண்டு வரும் இக்குளத்தின் அணைக்கட்டுகள் சேதமடைந்தும் உடைவுகள் ஏற்பட்டும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

கடந்த பருவமழையின் போது, குளம் ஆபத்தான கட்டத்தை அடைந்த நிலையில், பிரதேச மக்களால் பாதுகாக்கப்பட்டது. வருடாந்தம் பருவ கால மழையின்போது, குளம் ஆபத்தான நிலைக்கு சென்றுவிடுவதாகவும் மக்களால் தற்காலிகமாக, மண்ணணைகளை அமைத்து சமாளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்தக் குளத்தின் புனரமைப்பு பணிகளை உரிய காலத்தில் முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்

பங்களாதேஷ்

# பற்றி எரிந்த பங்காபஜார்; 3,000 கடைகள் சேதம்

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் உள்ள பிரபலமான ஆடைச் சந்தையான பங்காபஜாரில் நேற்று முன்தினம் (04) அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 3,000 கடைகள் தீயில் எரிந்து நாசமாகின.

600 தீயணைப்பு வீரர்கள் மற்றும் இராணுவத்தினர் கொளுந்து விட்டெறிந்த தீயை அணைக்கும் பணியில் 6 மணி நேரமாக ஈடுபட்டு தீயை கட்டுப்படுத்தினர்.

சிறிய அளவில் தடுப்புகளுக்கு இடையே அமைக்கப்பட்டுள்ள இக் கடைகளில் குறைந்த விலையில் ஆடைகள் கிடைக்கும் என்பதால் எப்போதும் அதிக சனநெரிசல் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.



மேலும் ரமலான் பண்டிகையை முன்னிட்டு ஒவ்வொரு கடையிலும் கூடுதலாக இருப்பு வைக்கப்பட்டிருந்ததால் வியாபாரிகள் கடுமையான நஷ்டத்தை சந்தித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்லாந்து

## நேட்டோவுடன் இணைந்தது பின்லாந்து




ரஷ்யாவின் கடும் எதிர்ப்பை மீறி நேட்டோ கூட்டமைப்பில் இணைந்த பின்லாந்து, ரஷ்ய எல்லையில் 200 கிலோமீற்றர் தொலைவிற்கு வேலி அமைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலேயே, ரஷ்யாவுடன் 1,340 கிலோமீற்றர் தொலைவிற்கு, மிக நீண்ட நில எல்லையை பின்லாந்து பகிர்ந்து வருகிறது.

ரஷ்யாவிலிருந்து சட்டவிரோதமாக வருபவர்களை கண்காணிப்பதற்காக மின்சார சென்சார்கள் பொருத்தப்பட்டு, 10 அடி உயரத்திற்கு அமைக்கப்படும் இந்த வேலியை 4 ஆண்டுகளுக்குள் கட்டிமுடிக்க பின்லாந்து அரசு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எகிப்து

## செல்ஃபி பிரியர்களுக்கென ஓர் உலகம்



எகிப்து தலைநகரான கெய்ரோவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ‘செல்பி ஹோல்’ என்னும் கேளிக்கை பூங்காவானது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.


இங்கு பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல்வேறு வகையான தீம்களுடன் செல்ஃபி எடுத்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இணையங்களில் பகிர்வதற்கான படங்களை பல கோணங்களில் எடுத்து காட்சி படுத்தும் விதம் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இளைஞர்கள் மட்டும் இன்றி பல தரப்பினர் இந்த நவீன செல்பி ஹோலுக்கு வருகை தந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




சத்தீஸ்கர்

## திருமணப் பரிசில் வெடிகுண்டு; மணமகன் மரணம்



தனது முன்னாள் காதலியின் திருமணத்திற்குச் சென்ற நபர் ஒருவர், பரிசுப் பொருளில் வெடிகுண்டு வைத்துப் பரிசளித்த சம்பவம் சத்தீஸ்கர் மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கபீர்தம் மாவட்டத்தைச் சேர்ந்த சர்ஜூ என்ற நபரே இவ்வாறு தனது காதலிக்கு வெடி குண்டு வைக்கப்பட்ட ஹோம் தியேட்டர் ஒன்றைப் பரிசளித்துள்ளார்.

இந்நிலையில் சம்பவ தினத்தன்று குறித்த பரிசுப் பொருளை புது மாப்பிள்ளை திறந்துள்ள நிலையில் அது வெடித்து புது மாப்பிள்ளையும் அவரது சகோதரரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நால்வர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில் குண்டுவைத்த நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணையில் “தனது முன்னாள் காதலி வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்ட காரணத்தாலேயே ஆத்திரத்தில் இவ்வாறு செய்ததாக அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

## அவருக்காகத் தீச்சட்டி எடுப்பேன்: கஞ்சா கறுப்பு



“தமிழ்நாட்டின் முதலமைச்சராக எடப்பாடி பழனிசாமி (EPS) மீண்டும் பெறுப்பேற்க வேண்டும்” என சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்குச் சென்று தீச்சட்டி எடுக்கவுள்ளதாக நகைச்சுவை நடிகர் கஞ்சா கறுப்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தற்போது நடப்பது அங்காளி பங்காளி சண்டை. இது விரைவில் முடிவுக்கு வரும். அ.தி.மு.கவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் இன்றைக்கு அடித்துக் கொள்வோம்; நாளைக்கு கூடிக் கொள்வோம்.

தற்போது உள்ள ஆட்சியில் மின்சார கட்டணம் வீட்டு வரி ஆகியவை உயர்த்தப்பட்டுள்ளன. அ.தி.மு.க ஆட்சி அமைந்திருந்தால் இக்கட்டண உயர்வுகள் இருந்திருக்காது. எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமை மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர், மீண்டும் அடுத்த தேர்தலில் முதலமைச்சராக வர வேண்டும் என்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு சென்று தீச்சட்டி எடுக்க உள்ளேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பொங்கியெழுந்தார் விஜயகாந்த்



காவிரி நீர் பாயும் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய நான்கு மாவட்டங்களும் டெல்டா மாவட்டங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த டெல்டா பகுதியில் நிலக்கரி சுரங்கம் அமைப்பது தொடர்பான அறிவிப்புக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் விஜயகாந்த் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலக்கரி சுரங்கம் அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவல் தமிழக விவசாயிகளின் தலையில் இடி விழுந்தது போல் உள்ளது. நிலக்கரி சுரங்கம் அமைக்கும் மத்திய அரசின் முடிவை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ஏற்கெனவே, வறட்சி, மழை நீரில் மூழ்கி விளை நிலங்கள் சேதம் போன்ற இயற்கை சீற்றங்களால் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதுபோன்ற சூழலில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதால் ஒட்டுமொத்த டெல்டா பகுதிகளும் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது.

மேலும், நிலக்கரி எடுக்க விளைநிலங்கள் கையகப்படுத்தப்பட்டால் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் அகதிகளாக இடம் பெயரும் நிலை ஏற்படும். மேலும், விவசாயமும் கேள்விக்குறியாகிவிடும்.

விவசாயிகள் மீது உண்மையில் பற்று இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் மத்திய அரசு, தற்போது விவசாயிகளுக்கு எதிரான திட்டத்தை அறிவித்திருப்பதை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, நிலக்கரி சுரங்கம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக கைவிட வேண்டும். இல்லையென்றால் விவசாய மக்களை ஒன்றுதிரட்டி வீதியில் இறங்கி போராடவும் தே.மு.தி.க தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்’ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது இருபதுக்கு 20 சர்வதேச போட்டியில்

# இலங்கையை வீழ்த்திய நியூசிலாந்து

இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், டுனேடினில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் பதிலணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். இலங்கையணியில் கடந்த போட்டியில் விளையாடிய சாமிக கருணாரத்னவை கசுன் ராஜித பிரதியிட்டிருந்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, 19 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தனஞ்சய டி சில்வா 37 (26), குசல் பெரேரா 35 (32), சரித் அஸலங்க 24 (19), குசல் மென்டிஸ் 10 (05) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அடம் மில்ன் 5/26 [4], பென் லிஸ்டர் 2/26 [4], ரஷின் ரவீந்திரா 1/24 [3], ஹென்றி ஷிப்லே 1/25 [3])

பதிலுக்கு 142 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 14.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், டிம் செய்ஃபேர்ட் ஆட்டமிழக்காமல் 79 (43), சட் போவ்ஸ் 31 (15), லேதம் 20 (30) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக மில்ன் தெரிவானார்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் செல்சி லிவர்பூல் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற அஸ்டன் வில்லாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

அந்தவகையில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 72 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுவதுடன், தலா 50 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் மூன்றாம், நான்காமிடங்களில் நியூகாசில் யுனைட்டெட்டும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரும் காணப்படுகின்றன. இதில், சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளதுடன், நியூகாசில் இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ளது.

ஐ.பி.எல்:

## டெல்லி கப்பிட்டல்ஸைத் தோற்கடித்த குஜராத் டைட்டான்ஸ்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), டெல்லியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் குஜராத் டைட்டான்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: குஜராத்

டெல்லி: 162/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 37 (32), அக்ஸர் பட்டேல் 36 (22), ஃஸ்ப்ராஸ் கான் 30 (34), அபிஷேக் பொரேல் 20 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரஷீட் கான் 3/31 [4], மொஹமட் ஷமி 3/41 [4], அல்ஸாரி ஜோசப் 2/29 [4], ஜொஷ் லிட்டில் 0/27 [4], ஹர்டிக் பாண்டியா 0/18 [3])

குஜராத்: 163/4 (18.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: சாய் சுதர்ஷன் ஆ.இ 62 (48), டேவிட் மில்லர் ஆ.இ 31 (16), விஜய் ஷங்கர் 29 (23), ரித்திமான் சஹா 14 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் மார்ஷ் 1/24 [3.1], குல்டீப் யாதவ் 0/18 [3])

போட்டியின் நாயகன்: சாய் சுதர்ஷன்

இந்நிலையில், கொல்கத்தாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின்

## விளையாட்டுப் போட்டியில் காட்மண்ட் இல்லம் முதலிடம்

க. விஜயரெத்தினம்

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் வருடாந்த திறனாய்வு இல்ல விளையாட்டுப்போட்டியில் காட்மண்ட் இல்லம் 389 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் தட்டிக் கொண்டது.

சோமநாதர் இல்லம் 383புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஒல்ட் இல்லம் 337 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், கோல்டம் இல்லம் 304 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன.




# ஐ.பி.எல்லில் இலங்கை அணித்தலைவர் ஷானக

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியாவின் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) குஜராத் லயன்ஸ் அணி, நியூசிலாந்தின் சிரேஷ்ட துடுப்பாட்டவீரர் கேன் வில்லியம்ஸனுக்குப் பதிலாக இலங்கையணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான அணித்தலைவர் தசுன் ஷானகவைக் கைச்சாத்திட்டுள்ளது.

நடப்புப் பருவகாலத்தின் முதலாவது போட்டியில் முழங்காலில் காயமடைந்ததைத் தொடர்ந்து இப்பருவகாலம் முழுவதும் வில்லியம்ஸன் விளையாட முடியாமல் போயிருந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 06 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.